**செய்தி வெளியீடு எண்:088** **நாள் :21.02.2015**

அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின்
பணிகள் ஆய்வு

------

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்
திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக
(Video Conference) ஆய்வு நடத்தினார்

------

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களில் உள்ள செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணிகளை, மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக (Video Conference) ஆய்வு நடத்தினார்.

இதற்கான ஆய்வுக் கூட்டம் (20.02.2015) அன்று மாலை தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சிக் கூட்ட அரங்கில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் முனைவர் மூ. இராசாராம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் கூறியதாவது:-

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழை எளிய மக்களின் நலன் கருதி எண்ணற்ற திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தியுள்ளார்கள். இத்திட்டங்களை சிந்தாமல் சிதறாமல் மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில், செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்களின் பங்கு மிக முக்கியமானது. கடந்த ஆண்டுகளில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டு வந்துள்ள அரசு திட்டங்கள் அனைத்திலும் அளப்பரிய சாதனைகளைப் படைத்துள்ளது. இந்த சாதனைகளை எல்லாம் மக்களுக்கு கொண்டு சேர்க்கின்ற பொறுப்பில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திறம்பட பணியாற்றி வருகிறார்கள். என்றாலும், இன்னும் சிறப்பாக பணியாற்றி அரசின் சாதனைகளை மக்களுக்கு செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் கொண்டு செல்ல வேண்டும்.

அனைத்து மாவட்டங்களிலும் பிப்ரவரி 24ம் தேதி நடைபெறும் தமிழக அரசின் சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சியை சிறந்த முறையில் செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்கள் நடத்திட உரிய ஏற்பாடுகளைச் செய்திட வேண்டும். அந்தந்த மாவட்ட அமைச்சர்களைக் கொண்டு புகைப்படக் கண்காட்சியை திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மாவட்ட ஆட்சியர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு தகவல் கொடுத்து, பங்கேற்கச் செய்து இப்புகைப்படக் கண்காட்சியை சிறந்த முறையில் நடத்திட வேண்டும்.

அரசு சாதனை விளம்பரப் பணிகளை மக்களுக்கு எடுத்துச் செல்வதில் தனி ஆர்வம் காட்ட வேண்டும். நாளிதழ்களில், அரசு திட்டங்களின் வெற்றிக் கதைகளை எழுதி நாளிதழ்களில் வரச் செய்திடல் வேண்டும். இதில் தீவிர ஆர்வம் காட்ட வேண்டும். திட்டங்களின் மூலம் பயனடைந்த பயனாளிகளைப் பேட்டி கண்டு அவர்களின் கருத்துக்களை நாளிதழ்களில் வெளியிடச் செய்ய வேண்டும்.

அரசு வீடியோ படக்காட்சிகளை தவறாமல் கிராமங்கள், பேரூராட்சி, நகராட்சி பகுதிகளில் காண்பித்து வர வேண்டும். இதில் சுணக்கம் ஏற்படக் கூடாது. டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு வீடியோ படக்காட்சி மூலமும், திரையரங்குகள் வாயிலாகவும் மற்றும் நாளிதழ்கள் வாயிலாகவும் ஏற்படுத்தியதில் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆற்றிய அரும்பணி பாராட்டுக்குரியது. இதைப் போன்று அத்தியாவசிய நேரங்களில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் மற்ற துறைகளுடன் இணைந்து விழிப்புணர்வுப் பணிகளை மக்களுக்கு சிறப்புற ஆற்ற வேண்டும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, ஒன்பது மாட்டங்களில் அரசுப் பொருட்காட்சிகள் நடைபெற்று வருகிறது. நடப்பாண்டில் புதியதாக பத்தாவது மாவட்டமாக கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் அரசுப் பொருட்காட்சி நடைபெறவுள்ளது. அரசுப் பொருட்காட்சி வாயிலாக அரசின் திட்டங்கள் மக்களுக்கு நல்ல முறையில் எடுத்துச் செல்லப்படுகிறது. அரசுப் பொருட்காட்சி நடைபெறும்போது, அந்தந்த மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் திறம்பட பணியாற்றி, மக்கள் அதிக அளவில் பொருட்காட்சியைப் பார்வையிட்டு அரசின் திட்டங்களை அறிந்து பயன்பெறச் செய்கின்ற வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும்.

மாவட்டங்களில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகளை, மாவட்ட ஆட்சியரின் ஒத்துழைப்புடன் செய்தியாளர்களை அழைத்துச் சென்று காண்பித்து அது குறித்த செய்திகளை நாளிதழ்களில் நல்ல முறையில் வெளி வரச் செய்ய வேண்டும். இதில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, அரசு மக்கள் நலத்திட்டங்களையும் பயன்களையும் பொதுமக்கள் உடனுக்குடன் அறிவதற்கு ஏதுவாக 32 மாவட்டங்கள், 10 அம்மா உணவகங்கள், சென்னையில் உள்ள 2 வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் புதுடெல்லியிலுள்ள தமிழ்நாடு இல்லம் ஆகிய இடங்களில் மின்னனு விளம்பரத் திரைகள் (LED TV) அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. இவைகள் நல்ல முறையில் இயங்கி வருகிறாதா என்பதை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் முறையாகக் கண்காணிக்க வேண்டும்.

மாவட்டங்களிலுள்ள நினைவகங்கள் மற்றும் நினைவு மண்டபங்களை நல்ல முறையில் தொடர்ந்து பராமரித்து வர வேண்டும். இதில் குறைபாடுகள் வரக் கூடாது.

அரசு கேபிள் டிவி மூலம் அரசின் சாதனைகள் நல்ல முறையில் ஒலிபரப்பச் செய்ய அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும்.

அரசு சாதனை விளக்கப் புகைப்படக் கண்காட்சிகளை மாவட்டங்களில் சிறந்த முறையில் மக்கள் அதிக அளவில் கூடும் இடங்கள் மற்றும் திருவிழாக் காலங்களில் சிறப்புற நடத்திட வேண்டும்.

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் பணி தர வரிசையில் முதலிடத்தை பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு போட்டி போட்டு முனைப்புடன் பணியாற்ற வேண்டும்.

அரசின் நான்காண்டு சாதனைகளை மக்கள் மத்தியில் முறையாகக் கொண்டு சேர்க்க வேண்டும். இதற்கான அனைத்து விளம்பரப் பணிகளையும் திறன்பட மேற்கொள்ள வேண்டும். அரசுக்கும் மக்களுக்கும் இணைப்புப் பாலமாக செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் இருந்து நல்ல முறையில் பணியாற்ற வேண்டும். செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆர்வத்தோடும் அதே நேரத்தில் பொறுப்புணர்வோடும், அனைத்துத் துறை அலுவலர்களோடு இணக்கமாகவும் செயல்பட்டு பாராட்டுக்களை பெற வேண்டும் என மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. கே.டி. ராஜேந்திரபாலாஜி அவர்கள் கூறினார்கள்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் வீடியோ படக்காட்சி, செய்தியாளர் பயணம், வெற்றிக் கதைகள், திரையரங்க ஆய்வு, புகைப்படக் கண்காட்சி, தமிழரசு இதழ், பணியாளர் நலன், காலிப் பணியிடங்கள், ஒப்பந்தப்புள்ளி செய்திமலர், தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனம், சிறப்பு வெளியீடுகள் குறித்து அமைச்சர் விரிவாக ஆய்வு நடத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறை, கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு. தங்க. புகழேந்தி, கூடுதல் இயக்குநர் (செய்தி) திரு. எஸ்.பி. எழிலழகன், இணை இயக்குநர் (பொருட்காட்சி) திரு. கு. தாணப்பா, இணை இயக்குநர் (கள விளம்பரம்) திருமதி டி.ஆர். ஜெயஸ்ரீ, இணை இயக்குநர் (நினைவகங்கள்) திரு. உல. ரவீந்திரன் உட்பட பல்வேறு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

----

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**